
சிலுவையின் செய்தி
பாடம் 2 ஜூலை 11, 2026


“சிலுவையைப் பற்றிய உபதேசம்
கெட்டுப்போகிறவர்களுக்குப்
பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற
நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.”
(1 கொரிந்தியர் 1:18)

1 கொரிந்தியர் 1:17-31ல் சிலுவை மக்களின் வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்ப்படுத்துகிறது என்பது குறித்து பேசுகிறது.

விசுவாசிகளை பொறுத்தவரை, சிலுவை என்பது மீட்பின் அடையாளமாகும். ஆனால் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களுக்கு, சிலுவை என்பது ஒரு குற்றவாளியின் அவமானகரமான மரணத்தையே குறிப்பதாக இருந்தது.

சிலுவையில் மரித்து, பின்னர் உயிர்தெழுந்த ஒருவரால் இரட்சிக்கப்பட்டவர்? மனிதர்களுக்கு இது மடமை மற்றும் அறிவீனம். ஆனால் பரிசுத்த ஆவியின் அழைப்பிற்கு தங்கள் இதயங்களை திறந்திருக்கும் நமக்கு, சிலுவை என்பது, "தேவபெலன், [...] ஞானம், நீதி, பரிசுத்தம், மற்றும் மீட்பு" (1 கொரி. 1:18, 30).









- தேவ ஞானம்
- சிலுவையின் பைத்தியம்
- தேவ பெலன்
- சிலுவையின் செய்தி
- தேவனுடைய பைத்தியமும் பலவீனமும்

# தேவ ஞானம்



"ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்."
(1 கொரிந்தியர் 1:24)



அத்தேனேவில், அங்குள்ள அறிஞர்களை நம்ப வைக்க பவுல் மனித ஞானத்தை பயன்படுத்தியிருந்தார். அதிலிருந்து, தெய்வீக ஞானத்தை மட்டுமே பயன்படுத்த அவர் தீர்மானித்தார்.

தேவனே அவரை தம் செய்தியை பிரசங்கிக்க அனுப்பியிருந்தார், "கிறிஸ்துவின் சிலுவை வீணாய்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்." (1 கொரி. 1:17).

பவுலினால் போதிக்கபட்ட தெய்வீக ஞானம் என்ன?

தேவனுடைய ஞானம், "ஞானிகளுடைய ஞானத்தை" அழிக்கிறது; "புத்திசாலிகளுடைய புத்தியை" அவமாக்குகிறது (1 கொரி. 1:19); மற்றும் "இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா? ..." (1 கொரி. 1:20).



மனிதர்களின் எல்லா தர்க்கங்களுக்கும் முரணாக, தேவ ஞானம் இதில் அடங்கியுள்ளது: "பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று." (1 கொரிந்தியர் 1:21).

# சிலுவையின் பைத்தியம்

"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்." (1 கொரிந்தியர் 1:23)



கிரேக்க வார்த்தை *மோரியா* (பைத்தியம், மதியீனம், முட்டாள்த்தனம்) 5 முறை 1 கொரிந்தியரில் பயன்படுத்தபட்டிருக்கிறது:

- "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது," (1 கொரிந்தியர் 1:18)
- "பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று." (1 கொரி. 1:21)
- "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம், [...] கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1கொரி. 1:23)
- "ஜென்மசுபாவமான மனுஷனோ [...] தேவனுடைய ஆவிக்குரியவைகளை [...] பைத்தியமாகத் தோன்றும்" (1 கொரி. 2:14)
- "இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது." (1 கொரிந்தியர் 3:19)



சிலுவையானது, அழிந்துபோகிறவர்களுக்கும், தேவனை அறியாதவர்களுக்கும்(புறஜாதியார்); இவ்வுலகைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறவர்களுக்கும் (இயல்பு மனிதன்); தங்கள் சொந்த ஞானத்தால் மட்டுமே வழிநடத்தப்படுபவர்களுக்கும் மடமையாயிருக்கிறது.


ஆனால் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது தேவனுடைய கண்ணோட்டத்தில், சிலுவையை நோக்க விருப்பமுள்ளவர்களுக்கு, சிலுவை ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறது.

# தேவ பெலன்

"சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது." (1 கொரிந்தியர் 1:18)

மனிதனின் மிக மோசமான தன்மையையும், தேவனுடைய மிக சிறந்த தன்மையையும் வெளிப்படுத்தும் வல்லமை சிலுவைக்கு உண்டு(1 கொரி. 1:18).

| மனிதனின் இழிவு | தேவனுடைய சிறப்பு |
|---|---|
| பைத்தியம் | வல்லமை |
| நிராகரிப்பு | ஏற்றுக்கொள்ளும் தன்மை |
| சுய-அழிவு | மன்னிப்பு |
| நித்திய நாசம் | இரட்சிப்பு |



சிலுவையை நிராகரிப்பவர்கள் தங்கள் தவறான செயல்களின் விளைவுகளை அறுவடை செய்கிறார்கள். இறுதியில், தாங்கள் நிராகரித்தவராலேயேஅவர்கள் அழிக்கப்படுவார்கள்.

சிலுவையில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் வல்லமை, மனிதனின் பாவங்கள் அனைத்தையும் மன்னித்து அவனை இறைவனோடு ஒப்புரவாக்கவும், அவனுக்கு நித்திய வாழ்வை அளிக்கவும் வல்லது (கொலோ. 1:20; 1பேது. 2:24).





# சிலுவையின் செய்தி

"எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று."
(1 கொரிந்தியர் 1:21)

**சிலுவையின் செய்தியை பிரசங்கிப்பது ஏன் முட்டாள்தனமாக உள்ளது(1 கொரிந்தியர் 1:21-24)?**

ரோமானிய அடக்குமுறையிலிருந்து தங்களை விடுவிக்கும் ஒரு மேசியாவை யூதர்கள் எதிர்பார்த்து கொண்டிருந்தனர். இயேசு தாம் சிலுவையில் அறையப்படவிருப்பதாக அறிவித்தபோது, அவருடைய சீடர்களே அதிர்ச்சியடைந்தனர். மேலும், ஒரு யூதரை பொறுத்தவரை, மரத்தில் தொங்கவிடப்பட்ட ஒரு நபர் தேவனால் சபிக்கப்பட்டவராக கருதப்பட்டார் (உபாகமம் 21:23). மீட்பர் வருவார் என்று சற்றும் எதிர்பாராத ஒரு புறஜாதியாருக்கும் அதே முடிவே இருந்தது: சிலுவை என்பது பைத்தியக்காரத்தனம்.

இருப்பினும், தேவதூதர்களை பொறுத்தவரை, சிலுவை குறித்த செய்தி முற்றிலும் மாறுப்பட்ட ஒன்றாக இருந்தது. பரலோகத்தில் அவர்கள் அறிந்திருந்த இயேசு, தம்மை நிராகரித்த ஒரு இனத்தின் மீதான அன்பினால், தாமே கொல்லப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தார். பவுல் தனது பிரசங்கத்தின் வாயிலாக வெளிப்படுத்த விரும்பிய கண்ணோட்டம் இதுவேயாகும்.

சிலுவையின் செய்தி, நமக்கு இரட்சிப்பை அருள தேவன் எவ்வளவு தூரம் செல்லவும் சித்தமாயிருந்தார் என்பதைக் காட்டுகிறது.

# தேவனுடைய பைத்தியமும் பலவீனமும்



"இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.." (1 கொரிந்தியர் 1:25)

தேவன் ஏதேனும் ஒரு வகையில் முட்டளானவரோ அல்லது பலவீனமானவரோ (1 கொரி. 1:25)?

நிச்சயமாக இல்லை, தேவனிடத்தில் எந்த குறைவும் இல்லை. பவுல் இங்கே ஒரு உருவக ஒப்பீட்டை மட்டுமே செய்கிறார்: ஒரு வேளை தேவனுக்கு ஏதேனும் முட்டாள்தனமான எண்ணம் இருந்திருந்தால் கூட, அது ஒரு மனிதனின் மிகச் சிறந்த ஞானமுள்ள எண்ணத்தைவிடவும் ஞானம் மிக்கதாக இருந்திருக்கும்; அல்லது தேவனிடம் ஏதேனும் பலவீனமான வாதம் இருந்திருந்தால்கூட, அது மனிதர்களின் மிக வலிமையான வாதங்களை விடவும் வலிமையானதாக இருந்திருக்கும்.



மிகவும் அறிவார்ந்தவர்களிடமிருந்து திரட்டப்பட்ட அனைத்து ஞானத்தாலும், மனிதகுலத்திற்கான ஒரு மீட்புத் திட்டத்தை வகுக்க இயலாது.

சிலுவையில் இயேசு செலுத்திய பலியின் வல்லமையின் மூலமாக, "இரட்சிக்கப்படுகிற நமக்கோ" (1 கொரி. 1:18); "விசுவாசிகளுக்கு" (1 கொரி. 1:21); மற்றும் "அழைக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு" (1 கொரி. 1:24) தேவனால் மட்டுமே மீட்பை அருள முடிந்தது.

பரிசுத்த ஆவியால் அழைப்பிற்கு பதிலளித்து இயேசுவை விசுவாசிப்பவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்பதை கவனியுங்கள்.

